பக்கங்கள்: 10

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 09 செவ்வாய்க்கிழமை 24.12.2024 கதிர் 047

## இனி இது ரகசியம் அல்ல!



'கிபிர்' போர் விமானங்கள் குறித்து புதிய தமிழ் தலைமுறை அறியாமல் இருக்கக்கூடும். ஆனால், பீதியைக் கிளப்பும் பெரும் சத்தத்துடன் மனித உயிர்களை, அதுவும் பொது ☞2

# மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றாமல் மின்சார கட்டணத்தை குறையுங்கள்

### எதிர்க்கட்சி எம்.பி. ஆளும்தரப்பிடம் கோரிக்கை

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு எதிராக ஆளும்தரப்பும் மின்சாரசபையும் இணைந்து செயற்பட்டு மக்களுக்குக் கிடைத்திருக்கவேண்டியநிவாரணத்தைத் தடுத்துள்ளன. மக்களை ஏமாற்றாமல் மின் கட்டணத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஆளும்தரப்பிடம் வலியுறுத்தினார்.

அவர் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் பணியிடத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனை வலியுறுத்தினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலங்களில் மின்சாரக் கட்டணத்தை மூன்றில் இரண்டு மடங்கால் குறைப்பதாகக் கூறியது. சட்டத்துக்கமைய இவ்வாண்டிறுதியில் மின்கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொண்டிருக்கவேண்டும். ஆனால் மின்சாரக் கட்டணத்தை குறைக்க வேண்டாம் என ஆளும்தரப்பால் மின்சாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு எதிராக ஆளும்தரப்பும் மின்சாரசபையும் இணைந்து செயற்பட்டு மக்களுக்கு கிடைத்திருக்க வேண்டிய நிவாரணத்தைத் தடுத்துள்ளன.

தேர்தல் காலங்களில் இவர்கள் ☞2

## இலங்கைக்கு மின்சாரம் விற்க வழி தேடும் அதானி நிறுவனம்

அதானி நிறுவனம் இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள கோடா மின்னுற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் பங்களாதேஷுக்குச் செல்லும் மின்சாரத்தை, இலங்கை போன்ற அண்டை நாடுகளுக்கு விற்பனை செய்வதற்கான வழிகளை ஆராய்ந்து வருவதாக ☞2

## உள்ளூராட்சித் தேர்தல் மே மாதமே சாத்தியம்

### உதய கம்மன்பில கூறுகின்றார்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் நடத்துவது சாத்தியமற்றது. மார்ச், ஏப்ரல் வரையான காலப்பகுதியில் சாதாரண தரப் பரீட்சை நடைபெறவுள்ளதால் மே மாதமளவில்தான் தேர்தலை நடத்த முடியும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார். ☞2

## உள்ளாட்சி தேர்தல் சட்டத்தை மிக விரைவில் திருத்துங்கள்

### தேர்தல் ஆணையம் அமைச்சிடம் கோரிக்கை

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தை திருத்தம் செய்யாமல் உள்ளூராட்சி மன்ற சபைத் தேர்தல் வாக்கெடுப்பு தினத்தை தீர்மானிப்பதில் சட்ட சிக்கல் காணப்படுகிறது. ஆகவே சட்டத்திருத்த பணிகளை விரைவாக நிறைவு செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சிடம் கோரியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை 2025 சித்திரைப் புத்தாண்டுக்கு முன்பாக நடத்துவதற்கு ☞2

# 'தூய சிறீலங்கா' செயலணியில் தமிழ் பேசுவோரும் வேண்டும்

### தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்றக் குழு வலியுறுத்து

**ஜனாதிபதி அநுரவும் தேசிய மக்கள் சக்திஆளும்தரப்பும்அடிப்படைவாதமற்ற தன்மையை தொடக்கத்தில் இருந்தே உறுதிப்படுத்தவேண்டும்.'தூயசிறீலங்கா' திட்டத்திற்கானஜனாதிபதிசெயலணியில் தமிழ் பேசுபவர்களையும் உள்ளடக்க வேண்டியது அவசியம் - என்று தமிழ் அரசுக்கட்சியின் நாடாளுமன்றக் குழுப் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் வலியுறுத்தியுள்ளார்**

**'தூயசிறீலங்கா' ஜனாதிபதிசெயலணி குறித்து அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:**

**ஜனாதிபதி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பில் கிளீன் சிறிலங்காஎன்னும்ஆணைக்குழுவானது ஜனாதிபதியின்செயலாளர்தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 18 உறுப்பினர்கள் உள்ளனர். அந்த 18 உறுப்பினர்களும் பெரும்பான்மை இனத்தவர்களாகவே உள்ளனர். தமிழர்களோ முஸ்லிங்களோ அதில் இல்லை.**

**பல்லின சமூகங்கள் உள்ள இலங்கையில் ஜனாதிபதி ☞2**

## பங்குச்சந்தையில் சுட்டெண் அதிகரிப்பு

கொழும்பு பங்குச் சந்தையின் நடவடிக்கைகளின் நேற்று முற்பகல் 11.45 மணிவரையான அடிப்படையில், அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 245 புள்ளிகளாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, கொழும்பு பங்கு சந்தையின் அனைத்து பங்குகளின் மொத்த விலை சுட்டெண் 15,000 புள்ளிகளை கடந்துள்ளது.

மேலும், வர்த்தக நாளில் 11.45 மணி வரை பங்குச் சந்தையின் மொத்த புரள்வு 5 பில்லியன்களாக பதிவாகி உள்ளதாகவும் கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது.

## தேர்தலின் முன்பாக அரச நியமனம் தராவிட்டால் பட்டதாரிகள் போராட்டம்

### வடக்கு கிழக்கு உள்வாரி பட்டதாரிகள் சங்கம் அறிவிப்பு

இலங்கையில் உயர் புள்ளிகளை பெற்ற உள்வாரி பட்டதாரிகளுக்கு அரச வேலைவாய்ப்பு அடுத்த தேர்தலின் முன் வழங்கப்படவேண்டும் இல்லைஎனில், நாடாளவிய ரீதியில் போராட்டம் முன்னெடுக்கபடும் என வடக்கு கிழக்கு உள்வாரி பட்டதாரிகள் சங்கத் தலைவர் சர்வகியன் தெரிவித்தார்.

அவர் யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனை வலியுறுத்தினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் உள்வாரி பட்டதாரிகள் 2,500 மேற்பட்டவர்கள் காணப்படுகின்றனர். இந்நிலையில் கடந்த 2021 ஆம் ஆண்டே கடைசியாக ஆளும்தரப்பால் பட்டதாரி நியமனம் வழங்கப்பட்டது. ☞8

## முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு இனி பொலிஸாரின் தனிப் பொறுப்பில்

### நேற்று முதல் முப்படையினர் விலகல்

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக இதுவரை கடமையில் இருந்த முன்படைகளைச் சேர்ந்தவர்களும் நேற்று முதல் விலக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் நடைபெற்ற நாடாளுமன்றக் அமர்வில், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ள முப்படையினரை நீக்கும் தீர்மானம் தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால விளக்கினார். இதன்படி நேற்று முதல் பொலிஸ் அதிகாரிகள் மாத்திரமே முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக போதியளவு பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ஆளும்தரப்புத் தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு 6 மாதங்களுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்படும் எனவும், அதற்கேற்ப பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படும் எனவும் மேலும் குறிப்பிட்டுள்ளது.

முப்படையினர் நீக்கப்பட்ட போதிலும், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பில் எவ்வித பிரச்சினையும் ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## மகிந்த ராஜபக்ஷ மீது இஸ்லாமி அரசு ட்ரோன் தாக்குதல் நடத்தும் அபாயம்

### அப்படியிருந்தும் பாதுகாப்பு குறைக்கப்பட்டதாம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீது இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்.ஐ.எஸ்) ஆயுததாரிகள் ஆளில்லாத வானூர்தி ☞2

# முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம்

### பிரதி அமைச்சர் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புஉறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த முப்படைகளைச் சேர்ந்தவர்களும் சேவையில் இருந்து மீளழைக்கப்பட்டுள்ளனர். ஆறு மாதத்துக்கொரு முறை பாதுகாப்பு விடயங்கள் மீள் பரிசீலனை செய்யப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு சேவையில் இருந்த முப்படைகளைச்சேர்ந்தவர்களும் மீளழைக்கப்பட்டு பொலிஸார் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டபோதுஅவர்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மக்களின் உயிர்களை ஈவு இரக்கமின்றிப் பலியெடுத்த இந்த அரக்கன் பற்றி வடக்கு கிழக்கில் உள்ள இரண்டு தலைமுறையினர் நன்கு அறிவர்.

போர்க் காலத்தில் சீனா முதல் இஸ்ரேல் வரை பல நாடுகளும் இலங்கைக்கு வழங்கிய போர் விமானங்களும் தங்கள் கழிவுகளை தமிழர்களின் தலைகளுக்கு மேல்தான் கொட்டின. சீனாவின் வை - 8 விமானங்கள் முதல் வை - 12 (சகடை), சியாமாசெட்டி, புக்காரா, கிபிர், மிக்- 27 என்று பல விமானங்களையும் எம்.ஐ - 17, எம்.ஐ. - 24 என்று ஹெலிகளையும் கண்டவர்கள் நாங்கள். வானில் கிடையாகப் பறந்தபடியே குண்டுகளை உருட்டி விடுவதில் தொடங்கி, வானிலிருந்து நிலம் நோக்கி குத்தி வந்து குண்டுகளை வீசிப் பின்னர் மேலெழுந்து செல்லும் போர் விமானங்கள் வரையில் அவற்றின் சத்தத்தை வைத்தே அது என்ன விமானம்என்றுசொல்லும்விற்பனர்களாகவும் பலர் இருந்துள்ளனர்.

விமானங்கள்வானில்குண்டுவீசுகையில் வீட்டிலிருந்தபடியே வானொலியில் குறும் அலைவரிசையில் விமானிக்கும் கட்டுப்பாட்டு அறைக்குமான உரையாடலை ஒட்டுக்கேட்டு எங்கே குண்டுபோடப் போகிறார்கள் என்று அறியும் திறன்படைத்த விற்பனர்களும் பலர் அன்றிருந்தார்கள். இது ஒரு விதத்தில் அன்றைய குட்டிச் சாகசங்களில் ஒன்றாக இருந்தது.

இப்போது இந்தத் தகவல் எல்லாம் ஏன் என்கிறீர்களா?

இப்படித் தமிழர்களின் தலைகளில் குண்டுகளைக் கொட்டிய போர் விமானங்கள் எல்லாம் இப்போது சும்மாதான் கிடக்கின்றன. இருந்தாலும் அவற்றை இன்னொரு போருக்குத் தாயராக வைத்திருக்காமல் இருக்க முடியுமா? அதனால் அவற்றை நவீனமயப்படுத்திப்பயன்படுத்தும்முயற்சியில் கடந்த காலங்களிலேயே இலங்கை ஆளும்தரப்புகள் ஈடுபாடு காட்டியிருந்தன. அப்படிபுதுப்பித்தல்மற்றும்நவீனமயப்படுத்தல் பணிக்காக அனுப்பப்பட்ட இஸ்ரேலிய கிபிர் விமானங்களில் ஒன்று இப்போது திரும்பி வருகின்றது.

ஸ்ரீலங்காவிமானப்படை(ரீஸிபுய்)அடுத்த ஆண்டுமுதல்மூன்றுமாதங்களுக்குள்அதன் மறுசீரமைக்கப்பட்டமற்றும்மேம்படுத்தப்பட்ட கிபிர் (லுகூஃஷ்ஷ) மல்டிரோல் போர் விமானம் ஒன்றை அதன் கடற்படையில் சேர்க்க உள்ளது.

இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் இண்டஸ்ட்ரீஸ் உடன் கையெழுத்திடப்பட்ட 50 மில்லியன் டொலர் ஒப்பந்தத்தின் கீழ் நவீன மயப்படுத்தப்பட்ட விமானம். இந்த ஒப்பந்தத்தின் கீழ் 5 கிபிர் விமானங்களை நவீனமயப்படுத்த 2021 கோட்டாபய ஆட்சியில் இணக்கம் ஏற்படுத்தப்பட்டது.

இந்தஜெட்விமானங்களின்செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும் நோக்கில், நவீன ரேடார், சென்சார்கள், தகவல் தொடர்பு அமைப்புகள் மற்றும் புதிய ஹெல்மெட்டுகள் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நவீனமயப்படுத்தல் திட்டத்தின் கீழ் கிபிர் விமானத்தின் இயந்திரங்கள் மற்றும் முக்கியமானபாகங்கள்மட்டுமேஇஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டு நவீனப்படுத்தப்படும், பெரும்பாலான மறுசீரமைப்புகள் விமானப்படையின்கட்டுநாயக்காநிலையத்தில் நடைபெறும், இஸ்ரேலின் நிபுணர்களின் உதவியுடன்இங்குமேம்படுத்தல்இடம்பெறும்.

இன்றையசூழ்நிலையில்இந்தவிமானங்கள் இலங்கைக்கு அத்தியாவசியமானவை அல்ல. அவை மேம்படுத்தப்பட்டுத் திரும்பி வந்ததன் பின்னர் இந்து சமுத்திர பாதுகாப்புப்பணியில்ஈடுபடுத்தத்தான் அவை பயன்படுத்தப்படவுள்ளன. இருந்தாலும்அடுத்த ஆண்டு முற்பகுதியில் 5 கிபிர் விமானங்கள் இவ்வாறு நவீனமயப்படுத்தப்படவுள்ளன.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரச செலவுகளைக் குறைக்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பைக் குறைக்க நடவடிக்கை எடுத்தாலும் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு, படைகளை நவீனமயப்படுத்தும் திட்டத்திலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்பதையே இது காட்டுகின்றது. கடற்படை விரிவாக்க முயற்சிகளின் ஒரு பகுதியாக, இலங்கை வான்படை இரண்டு புதிய சீன தயாரிப்பு வை12 விமானங்களையும் வாங்கியுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தூய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலணிக் குழுவில் தமிழ் பேசும் சமூகத்தவர்கள்இடம்பெறாதநிலைப்பாடுதமிழ் பேசும் சமூகத்தவர் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறுதான்கடந்தபொதுஜனப்பெரமுன ஆட்சிக் காலத்தில் கோட்டாபய ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட தொல்லியல் ஆணைக்குழு என்கின்ற, தமிழ் பேசும் மக்களுக்குத் தொல்லைகள் கொடுத்த ஆணைக்குழுவிலும் தமிழ் பேசும் பிரதிநிதிகள் இடம்பெறவில்லை.

அந்த பொது ஜனப் பெரமுன அரசும் தொல்லியல் ஆணைக்குழுவும் இன மத அடிப்படைவாத, அடிப்படையில்தான் அமைந்திருந்தது.

அதன் செயற்பாடுகளான தொல்லியல் இடங்களை இனங்காணுதல் மற்றும் பௌத்த விகாரைகளை அமைத்தல் என்பன அடிப்படைவாதச் செயற்பாடுகளாகவே இருந்தன.

தற்போதைய தேசிய மக்கள் சக்தியால் அமைக்கப்பட்ட 'கிளீன் சிறிலங்கா' ஆணைக்குழுவில், தமிழ் பேசும் எவரும் இடம்பெறாத நிலைமையும் சந்தேகத்தைத் தருகின்றது.

முதல் கோணினால் முற்றும் கோணும் என்கின்ற பழமொழியொன்று தமிழில் உண்டு. ஆயின், இந்த ஆணைக்குழுவில் தமிழர்கள்,முஸ்லிம்கள்இடம்பெறவேண்டியது அவசியமாகும். இல்லாதுவிட்டால், குழுவின் செயற்பாடுகளிலும் சந்தேகம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. எனவே, ஜனாதிபதி அநுரவும் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பும் அடிப்படைவாதமற்றதன்மையைதொடக்கத்தில் இருந்தே உறுதிப்படுத்த வேண்டும்.

எது எப்படியாக இருந்தாலும் 75 ஆண்டுகளாக அடிப்படைவாதம், ஊழல், மோசடிகள், திருட்டுகள், இலஞ்சம்என்பவற்றால் நாசமாக்கப்பட்ட இந்நாட்டை சுத்தம் செய்ய வேண்டிய தேவை அவசியமானதாகும் . சுத்தப்படுத்த வல்ல தமிழர், முஸ்லிம் மக்களும்இலங்கையில் உள்ளனர் என்பதை ஜனாதிபதி அநுர நினைவில் கொண்டு, செயலாற்ற வேண்டும் - என்றார்.

## மக்களைத் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதற்குப் புறம்பாக தற்போது மூன்று ஆண்டுகளின் பின்னரே மின் கட்டணத்தில் திருத்தங்கள் ஏற்படும் என்று குறிப்பிடுகிறார்கள். இவ்வாறு மக்களை ஏமாற்றாமல்மின்கட்டணத்தில்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம்.

அதேபோன்று ஓய்வு பெற்றவர்களின் சேமிப்பு பணத்துக்கு அதிக வட்டி வழங்குவதாகவும் தேர்தல் காலங்களில் வாக்குறுதியளிக்கப்பட்டது. ஆனால்தற்போது ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த வட்டியும் குறைக்கப்பட்டுள்ளதாகவே தெரியவருகிறது. அது மாத்திரமின்றி சேமிப்புக்கான வருட வட்டிக்கு 10 சதவீதம் வரி ஆளும்தரப்பால் அறவிடப்படுகிறது. இது அநீதியாகும். தேசிய மக்கள் சக்தி மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்கு இது பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மதுபானசாலைகளுக்கான அனுமதிப் பத்திரம் தொடர்பில் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் ஓரிரு அரசியல்வாதிகளின் தலையீட்டுடன் வழங்கப்பட்டவை தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டதே தவிர, ஏனையவை தொடர்பில் எந்தத் தகவலும் இல்லை.

அதேவேளை சட்டத்துக்கு முரணாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்யுமாறும் வலியுறுத்தினோம். ஆனால் இதுவரை அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை - என்றார்.

## உள்ளூராட்சித்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் உள்ள தனது கட்சிப் பணியிடத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தஅவர்இதுதொடர்பில்தெரிவித்ததாவது:

சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி குறிப்பிடுவதை போன்று வெகுவிரைவாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதாக இருந்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களை முதலில் இரத்துச் செய்ய வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுகளுக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர் தலை நடத்துவது சிக்கலானதுதான் என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டாகத்தான்வேண்டும்.

புதிதாக வேட்புமனு கோருமாறு அரசியல் கட்சிகள் உட்பட பல தரப்பினர் வலியுறுத்தியதற்கமைய வேட்புமனுக்களை நீக்க டிசெம்பர் 3 அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

வேட்புமனுக்களை நீக்கும் வகையிலான சட்ட வரைவு விரைவாகத் தயாரிக்கப்பட்டு, டிசெம்பர் 30 வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டு முதல் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில்சமப்பிக்கப்பட்டதன்பின்னர் அந்தச் சட்டமூலத்தை உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவதற்கு 14 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படவேண்டும்.

நீதிமன்றத்தின் வியாக்கியானத்துக்கு பின்னர் இந்த சட்டமூலத்தை பெப்ரவரி மாதம் நிறைவேற்றிய மறுதினமே தேர்தலை நடத்த முடியாது. தேர்தல் பணிகளை முன்னெடுக்க தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு போதுமான காலவகாசம் வழங்கவேண்டும்.

சட்ட திருத்தத்தை நிறைவேற்றி, தேர்தல் பணிகளை விரைவாக முன்னெடுத்தாலும் சித்திரைபுத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது .

மார்ச் முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் சாதாரண தர பரீட்சை நடைபெறவுள்ளது.ஆகவே 2025 ஆம் ஆண்டு மே மாதமளவில் தேர்தலை நடத்த முடியும் என்றார்.

## மகிந்த....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(ட்ரோன்) தாக்கதல் நடத்தும் அபாயம் இருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்தபோதும் அவரது பாதுகாப்பைக் குறைக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவின் சட்டத்தரணிகள் சங்கத்தின் உப தலைவர் மனோஜ் கமகே நேற்று இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். மகிந்தவின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த தரைப் படையினரை ஆளும் தரப்பு அண்மையில் விலக்கிக் கொண்டது. அதற்கு முன்னதாக முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக பெருமளவு பணம் வீண்விரயமாக்கப்படுவதாகத் தெரிவித்த ஆளும் தரப்பு மீளாய்வுகளின் பின்னர் அவர்களின் பாதுகாப்புக் கடமையில் இருந்து முப்படையினரையும் நீக்குவதற்கு முடிவு செய்தது. தற்போது பொலிஸார் மட்டுமே மகிந்த உள்ளிட்ட முன்னாள் ஜனாதிபதிகள்ஐவருக்கும்முன்னாள்ஜனாதிபதி பிரேமதாசவின் மனைவி கேமாவிற்கும் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

ஆளும் தரப்பின் இந்த முடிவை மனோஜ் தொடர்ந்து கண்டித்துக் குரல் எழுப்ப வருகின்றார். ஆனால், முன்னாள் ஜனாதிபதிகளின் வீட்டு வேலைகளைச் செய்வதற்கும்தனிப்பட்ட உதவியாளர்களாகப் பணியாற்-றுவதற்கும் படையினரை வழங்க முடியாது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, மகிந்த மீது இஸ்லாமிய அரசு ஆயுதாரிகள் ஆளில்லா வானூர்த்தித் தாக்குதலை நடத்தும் ஆபத்து இருப்பதாக மனோஜ் தெரிவித்திருக்கிறார். நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதாள உலகக் குழுவினரிடம் இருந்தும் விடுதலைப் புலிகளிடம் இருந்தும் மகிந்த ராஜபக்சவுக்கு ஏற்படும் உயிர் அச்சுறுத்தல்கள் குறையவில்லை என்று புலனாய்வு அமைப்புக்களின் 13 அறிக்கைகளில் தெரிவித்துள்ளபோதும் அவரது பாதுகாப்புக் குறைக்கப்படக்கூடாது என்றார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக் குறித்து மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதிக் குழு ஜனாதிபதிகள் பாதுகாப்புப் பிரிவிடம் இருந்து முன்னாள் ஜனாதிபதிகளுக்கான அச்சுறுத்தல் குறித்து அறிக்கை கேட்டபோது, மகிந்தவுக்கு இருக்கும் ஆபத்துக் குறித்து முழுமையாகத் தெரிவிக்கப்பட்டபோதும் ஆளும்தரப்பு அதனைக் கருத்தில் எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## உள்ளாட்சி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்புத்தீர்மானித்திருப்பதாகஜனாதிபதி அண்மையில் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகளுக்காக ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களைநீக்கி புதிதாக வேட்புமனுக்களை கோருவதாயின் உள்ளூராட்சி மன்ற சபைத் தேர்தலை திருத்தம் செய்யவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்குத் தெரியப்படுத்தியிருந்தது.

உள்ளூராட்சிமன்றசபைசட்டத்தை 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் திருத்தம் செய்வதாக அரச நிர்வாகம், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்துமூலமாக அறிவித்துள்ளது. குறித்த சட்ட திருத்தத்தைவெகுவிரைவில்நிறைவேற்றுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுள்ளது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்து, புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ள நிலையில், தேர்தல் பணிகளை மீண்டும் தொடக்கத்தில் இருந்து முன்னெடுக்கவேண்டும். ஆகவே சட்டத் திருத்தத்தை துரிதமாக நிறைவேற்றுமாறு தேர்தல்கள்ஆணைக்குழுவலியுறுத்தியுள்ளது.

உத்தேச உள்ளூராட்சி மன்ற சபைத் தேர்தலுக்கு 80 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள்என்றுஎதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் தேர்தல் செலவுகளை மதிப்பிடுவது கடினமானதுஎனவும்தேர்தல்கள்ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்துச் செய்வது தொடர்பான சட்ட வரைவினை எதிர்வரும் மாதம் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதாக தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சித்திரைபுத்தாண்டுக்குப்பின்னர்உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பை நடத்துவார் எனவும் உறுதியளித்திருந்தார்.

## இலங்கைக்கு ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக சில சிக்கல்களுக்கு மத்தியில் குறித்த மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து பங்களாதேஷுக்கு மின்சாரம் வழங்கும் அளவை அதானி நிறுவனம் குறைத்துள்ளது.

இந்தத் திட்டத்தைத் தக்கவைக்க, உள்நாட்டுச் சந்தையில் மின்சார விற்பனையை இந்திய ஆளும்தரப்பு சமீபத்தில் அனுமதித்திருந்தாலும், இதில் ஒரு புதிய பரிமாற்ற பிணைப்பு அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதானியின் மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து இலங்கைக்கு மின்சாரத்தை விற்பனை செய்வதற்கு பங்களாதேஷ் ஆளும்தரப்பின் அனுமதி தேவைப்படும் என பங்களாதேஷின் மின்சக்தி, வலுசக்தி மற்றும் கனிம வளங்கள் அமைச்சகத்தின் ஆலோசகர் முஹம்மது ஃபௌசுல் கபீர் கான் தெரிவித்துள்ளார்.

## முன்னாள்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் பழிவாங்களுக்காக முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்பட்டது என்று குறிப்பிடப்படுவது அடிப்படையற்றது. முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே பாதுகாப்பு பணியில் இருந்த முப் படைகளைச் சேர்ந்தவர்களும் சேவையில் இருந்து மீளழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசியல் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் தரப்பினர் முறையான காரணிகளைக் குறிப்பிடவேண்டும். ஒட்டுமொத்த மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஆளும்தரப்புக்கு உண்டு.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் இதர சலுகைகள் குறித்து எதிர்வரும் வாரமளவில் உறுதியான தீர்மானம் எடுக்கப்படும். முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஆறு மாத காலத்துக்கு ஒருமுறை மீள்பரிசீலனை செய்யப்படும். முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்குபோதுமானஅளவில்பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு மற்றும் சலுகைகள் உட்பட நாடாளுமன்ற

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# இயற்கை பேரழிவுகளால் ஏற்படும் சேதத்தை குறைக்க ஜப்பானின் நிதியுதவியில் டொப்ளர் வானிலை ராடார்



வானிலை மதிப்பீடுகளின் துல்லியத்தை கணிசமாக மேம்படுத்தவும் நம்பகமான வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் எச்சரிக்கைகளை செயல்படுத்தவும் இயற்கை பேரழிவுகளால் ஏற்படும் சேதத்தை குறைக்கவும் ஜப்பானின் நிதியுதவியில் டொப்ளர் வானிலை ராடார் வலையமைப்பை நிறுவுவதற்கான அடிக்கால் நாட்டும்நிகழ்வுஇடம்பெற்றது.

புத்தளத்தில் நேற்று (திங்கட் கிழமை ) நடைபெற்ற டொப்ளர் வானிலை ராடார் வலையமைப்பை நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டும் விழா மற்றும் ஊடகவியலாளர் சந்திப்பில்ஜப்பான்தூதரகத்தின் துணைத் தலைவர் கமோஷிதா நவோக்கி கலந்துகொண்டார்.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாதுகாப்புஅமைச்சின்அனர்த்த முகாமைத்துவபிரிவின்மேலதிக செயலாளர் கே.ஜி தர்மதிலக மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஜப்பானிய மானிய உதவியால் நிதியளிக்கப்பட்ட டொப்ளர் வானிலை ரேடார் வலையமைப்பு இலங்கையில் நிகழ்நேர மழைவீழ்ச்சியைக் கண்காணிப்பதற்கானதிறனை மேம்படுத்துவதையும் வானிலை தொடர்பான அனர்த்தங்களின் தாக்கத்தைத் தணிப்பதையுமாகக் கொண்டுள்ளது.

வானிலை கண்காணிப்பு ரேடார் கோபுரம், மத்திய செயலாக்க அமைப்பு மற்றும் காட்சி அமைப்பு ஆகியவற்றை நிறுவுவதன் மூலம் இந்த நோக்கம் அடையப்படும்.

இந்த திட்டம் வானிலை மதிப்பீடுகளின் துல்லியத்தை கணிசமாக மேம்படுத்தும், மேலும் நம்பகமான முன்னறிவிப்புகள் மற்றும் எச்சரிக்கைகளை இது செயற்படுத்துகிறது, மேலும் வெளியேற்ற வழிகாட்டுதலில் உதவுகிறது, இதனால் இயற்கை பேரழிவுகளால் ஏற்படும் சேதம் குறைக்கிறது.

காமோஷிதா தனது உரையில், பேரிடர் தடுப்பு மற்றும் தணிப்பு தொடர்பாக இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

இலங்கைக்கு ஆதரவாக நிற்பதற்கான ஜப்பானின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை அவர் மேலும் வலியுறுத்தினார், மேலும் இந்தத்திட்டம் பாதுகாப்பான மற்றும் மிகவும் நெகிழ்வான சமூகத்தை கட்டியெழுப்ப உதவும் என்று நம்பிகை தெரிவித்ததார்.

# துறைசார்ந்த பாடங்களுக்கு ஆசிரியர்கள் இன்மையால் கிராமப்புற மாணவர்களின் கல்வியில் பெரிதும் பாதிப்பு

## உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் கருத்து

கிராமப்புறபாடசாலை களில் துறைசார்ந்த பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமை மாணவர்களின் கல்வியை பின்னோக்க வைக்கிறது.

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் கிராமப் புறப் பாடசாலைகளில் துறைசார்ந்த பாடங்களுக்கு நீண்ட காலமாக ஆசிரியர்கள் நிரப்பப்படாமை ஏழை மாணவர்களின் கல்வி கேள்விக்குள்ளாகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு 2025 ஆம் ஆண்டாவது கிராமப்புற பாடசாலைமாணவர்களின்கல்விக்கு ஒளியேற்ற முன்வர வேண்டும்.

கிராமத்தில் பாடசாலையை நம்பியே மாணவர்கள் கல்வியை தொடருகின்றனர். ஆனால் நகரப்புற பாடசாலைகள் அப்படி அல்ல. தமது பாடசாலைக்கு தேவையானவற்றை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளுகின்றனர்.

அது மட்டுமல்லாது நகரப்புறப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் வடிகட்டப்பட்ட பின்னர் கிராமப்புறப் பாடசாலைகளுக்கு வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன. இங்கு உளரீதியாக பாதிக்கப்பட்ட பிரச்சினைகளுக்குரிய ஆசிரியர்கள் கிராமப்புறப் பாடசாலைகளுக்கே அனுப்பப்படுகின்றனர்.

இதனால் பாதிக்கப்படுவது மாணவர்களே. இலவச கல்வியை பெற்றுக் கொள்ளத்துடிக்கும் கிராமப்புறமாணவர்களுக்குதுறைசார்ந்தபாடங்களைதுறைசார்ந்த ஆசிரியர்கள் கற்பிப்பதில்லை இதனால் துறைசார்ந்த அறிவினையோ அடைவுமட்டத்தையோ பெறமுடியாதுள்ளனர். இங்கு யாரையும் குறைசொல்லிவிட முடியாது. ஏனெனில் இருக்கின்ற ஆசிரிய வளங்களை வைத்தே பங்கீடு செய்ய முடியும். ஆனால் இடமாற்ற இடர்பாடுகளை சீர்செய்து ஆசிரியர்களும் பாதிக்கப்படாத வகையில் ஆசிய வளங்களைகிராமப்புறபாடசாலைகளை நோக்கி நகர்த்த வேண்டும். இல்லையேல் கல்வி வீழ்ச்சியடைவதுடன் மாணவர்கள் கல்வியில் இருந்து இடைவிலகுவதற்கு நாமே காரணமாகிவிடக்கூடாது.

எனவே அடுத்தவருடம் சரியான முறையில் இடமாற்றம் செய்வதுடன் துறைசார்ந்த ஆசிரியர் வெற்றிடங்களை கிராமப்புற பாடசாலைகளுக்கு பூர்த்தி செய்யவேண்டும். - என்றார்.

# கை குழந்தைகளைப் பயன்படுத்தி வவுனியாவில் ஊதுபத்தி வியாபாரம்

## மௌனம் காக்கும் அதிகாரிகள்

வவுனியா நகரில் வெளிநாட்டவர்களையும், பொதுமக்களையும் அசௌகரியப்படுத்தி கடைத் தொகுதி, வீதிகளில் கைக் குழந்தைகள் மற்றும் சிறுவர்களுடன் ஊதுபத்தி விற்பனை செய்பவர்கள் தொடர்பில் அதிகாரிகள் அல்லது பொறுப்பு வாய்ந்தவர்கள்உரியநடவடிக்கைஎடுக்க வேண்டும் என வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஊதுபத்தி விற்கும் பெண்களின் தொல்லை நாளாந்தம் அதிகரித்து வருவதாகவும், ஊதுபத்தி விற்பது போல் பெண்களை வசியப்படுத்தி நகைகளை பறிக்க முயற்சி செய்வதாகவும் குற்றம்சாட்டுகின்றனர்.

இவர்கள் ஒரு குழுவாகவே வெளியிடங்களில் இருந்து வருகைதந்து குறித்த பெண்கள் கைக் குழந்தையுடன் அமர்ந்து இருக்கின்றனர். அதிகமானவர்கள் கர்ப்பிணிப் பெண்களாகவும் பாலூட்டும் தாய்மார்களாகவும் உள்ளனர். இதில் சிறுமிகளும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஊதுபத்தி விற்பனை செய்யும் போது ஊதுபத்தியை பார்த்துவிட்டு வாங்குவதற்கு தவறும் பட்சத்தில்பொதுமக்களையும், வெளிநாட்டவர்களையும் தகாத வார்த்தைகளால் அவதூறாக பேசுவது உள்ளிட்ட செயல்களில் ஈடுபடுகின்றனர்.

குறித்தவிடயம்தொடர்பில் நகரசபை மற்றும் பொலிஸார், சிறுவர் பாதுகாப்பு பிரிவு, மாவட்ட செயலகம்உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த சகலருக்கும் தெரிந்திருந்தும், தெரியப்படுத்தியிருந்தும் எந்தவொரு நடவடிக்கையும் இது வரையில் எடுக்கப்படவில்லை. இவ்வாறான நடவடிக்கைகளால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

எனவே, பொறுப்பு வாய்ந்தவர்கள் இனி வரும் காலங்களில் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(100)

# உடதும்பறை விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்





உடதும்பறை பிரதேச விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் ஒன்று சேர்ந்து, கண்டி மஹியங்கனை வீதியில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

தமது விவசாய உற்பத்திகளுக்கு வன விலங்குகளால் சேதம் ஏற்படுவதாகவும் குறிப்பாக குரங்கு, காட்டுப் பன்றி, முள்ளம் பன்றி, மர அணில் போன்றவை பாரிய சேதத்தை ஏற்படுத்துவதாகவும் இதற்கு விவசாய அமைச்சரும் விவசாயத் திணைக்களமும் விரைவில் நிரந்தரத் தீர்வு ஒன்றைப் பெற்றுத்தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் கண்டி-மஹயங்கனை வீதியில் 35 ஆம் மைல்கல் பிரதேசத்தில் இடம்பெற்றதுடன் விவசாய அமைச்சும் தலையிட்டு, விவசாயத்தை நம்பி வாழும் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை வழங்குமாறு கோரினர்.

சுற்றுச்சூழல் ஆர்வலர்களது கோசங்களுக்கு அடிபணியாது எமக்கு நிரந்தர தீர்வுகாணப்பட வேண்டும், அப்படியல்லாத நிலையில் தாமும், நாடும் பாரிய பொருளாதார பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

# சீனா வழங்கிய மீன்பிடி வலைகள் கிளிநொச்சி மாவட்ட மீனவருக்கு

மீனவர்களுக்கென சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மீன் பிடி வலைகள் கிளிநொச்சி மாவட்டத் தைச் சேர்ந்த மீனவர்களுக்கு வழங்கும் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது. வடபகுதி மீனவர்களுக்கென கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு கொண்டு வரப்பட்ட மீன் பிடி வலைகள்கிளிநொச்சிமாவட்ட மீனவர்களுக்கு வழங்கும் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங்கல் திணைக்கள அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 870 மீனவர்களுக்கு தலா 06 வலைகள் மூலம் 5220 வலைகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் ரமேஸ்கண்ணா தெரிவித்தார். (316)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இதுதான் உண்மையான சவால்

வடக்கு மாகாண புதிய ஆளுநர் பதவியேற்றதற்குப் பின்னர் அவருக்கான மிக முக்கிய சவால் அவர் முன்பாக வந்துள்ளதாகத் தெரிகின்றது. வடக்கு மாகாணத்திற்கான ஆசிரியர் வளப் பங்கீடு மற்றும் இடமாற்றம் பற்றிய பிரச்சினையே அது.

யாழ். மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்டிருந்தபோதும் வெளி மாவட்டங்களில் கட்டாயம் 5 முதல் 7 வருடங்கள் வரை கட்டாயம் பணியாற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டவர்கள் நேற்று ஆளுநரைச் சந்தித்து தமது இடமாற்றப் பிரச்சினை குறித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அப்போது, யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களில் ஒருபோதும் வெளி மாவட்டங்களுக்குச் சென்று பணியாற்றாதவர்களை இடம்மாற்றம் செய்யவேண்டும் என்று அதிகாரிகளுக்குத் தான் அறிவுறுத்தியுள்ளார் என்று ஆளுநர் பதிலளித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகளவு ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள். ஏனைய மாவட்டங்களில் ஆசிரியர்களுக்குப் பெரும் பற்றாக்குறை இருந்தபோதும் யாழ்ப்பாணத்தில் இருக்கும் மேலதிக ஆசிரியர்கள் ஏனைய மாவட்டங்களுக்கு இடம்மாற்றப்படுவது மிக மிகக் குறைவு. அரசியல் தலையீடுகள் மட்டுமன்றி அதிகார வர்க்கத்தின் தலையீடுகளாலுமே இந்த நிலை பல ஆண்டுகளாக நீடிக்கின்றது. அதிலும் குறிப்பாக போருக்குப் பின்னரான காலத்தில் இதன் தாக்கம் மிக அதிகம். இதனால் கட்டாயப் பணிக்காக வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டவர்கள் தொடர்ந்தும் அங்கேயே பணியாற்றவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகின்றார்கள். அவர்களை அங்கிருந்து விடுவிப்பதற்கான மாற்று ஆசிரியர்கள் கிடைக்காமையே இதற்கான முதன்மைக் காரணம்.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் இந்த நிலையில் மாற்றம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு பெருமளவில் உள்ளது. அந்த அடிப்படையிலேயே நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் நேற்று வடக்கு ஆளுநரைச் சந்தித்து தமது பிரச்சினைக்குத் தீர்வு கேட்டனர்.

வெளிமாவட்டங்களில் தாம் நீண்டகாலம் பணியாற்றுகின்றனர் என்றும் தம்மோடு பணிக்கு வந்தவர்கள் பலர் செல்வாக்குகளின் அடிப்படையில் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்று விட்டனர் எனவும் சுட்டிக்காட்டிய அவர்கள், தமக்குப் பின்னர் நியமனம் பெற்றவர்கள்கூட சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ள நிலையில் தமக்கு மட்டும் அநீதி இழைக்கப்பட்டு வருவதாகக் குறைப்பட்டனர் என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு கூறுகின்றது.

வடக்குமாகாணத்தின்ஏனையமாவட்டங்களில்யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் பணியாற்றவேண்டியது கட்டாயம், அவ்வாறு இதுவரை பணியாற்றாத ஆசிரியர்கள் இருப்பின் உரிய நடைமுறைக்கு அமைவாக அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும் என்று அப்போது ஆளுநர் உறுதிமொழி வழங்கினார் எனவும் அவரது ஊடகப் பிரிவு தெரிவிக்கிறது.

வெளி மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு ஆசிரியர் ஒருவர் இடமாற்றப்படும்போது அதே பாடத்துக்குரிய ஆசிரியர் வெளிமாவட்டத்துக்கு விடுவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். எதிர்காலத்தில் இந்த நடைமுறைகள் உரிய வகையில் பின்பற்றப்படும் எனவும் ஆளுநர் கூறியிருக்கிறார்.

இந்த விவகாரத்தில் நடைமுறை பற்றியும் சட்டம் பற்றியும் பேசுவது இலகு. ஆனால் அதனை நேர்மையாக நடைமுறைப்படுத்துவதுதான் மிகமிகக் கடினம் என்பது கடந்த காலப் பட்டறிவு. யாழ்ப்பாணத்தில் வெளிமாட்டங்களில்காலடியேவைக்காதபலர்பணியாற்றுகின்றார்கள். ஆசிரியர்களாக மட்டுமல்ல அரச நிர்வாக சேவை உள்ளிட்ட பல தரப்பட்ட அதிகார மட்டங்களிலுமே இந்த நிலை காணப்படுகின்றது என்பது ஆளுநருக்குத் தெரியாததும் அல்ல, அதன் பின்னுள்ள அரசியல் புரியாததுமல்ல. அவர் ஏற்கனவே இங்கு அரச உயர் அதிகாரியாகக் கடமையாற்றியவர்தான். அதனால் இதன் பின்னால் உள்ள அதிகாரச் சூட்சுமங்கள் அவருக்கு நன்கு தெரியும்.

இப்போது கேள்வி எல்லாம், அந்த அதிகாரச் சூட்சுமங்களைத் திறம்படக் கையாண்டு நேர்மையான முறையில் ஆசிரியர் இடமாற்றங்களைமேற்கொள்ளமுடியுமா? ஆசிரியர் இடமாற்றங்களை எப்போதும் குழப்புகின்ற அமைப்புக்களில் ஆசிரியர் சங்கங்களுக்கு மிக முக்கிய இடமுண்டு. ஆளும் தேசிய மக்கள் சக்தியின் ஆசிரியர் சேவைச் சங்கமும் அதிலொன்று. இந்த முறை ஆளும் தரப்பாக இருக்கும்இவர்களின்செல்வாக்கைமீறிஇந்தவிடயத்தைஆளுநரால் நேர்மையான முறையில் இடமாற்றங்களைச் செயற்படுத்திவிட செல்வாக்குச் செலுத்த முடியுமா?

முறைமை மாற்றம் பற்றிய தேசிய மக்கள் சக்தியின் வாக்குறுதிகள் மீது வடக்கில் மிக உறுதியான பரிசோதனைக் களமாக இதுவே இருக்கப் போகின்றது. தான் வாக்குறுதியளித்தபடி அடுத்த ஆண்டுக்கான இடமாற்றம் நேர்மையானதாக இடம்பெறுவதை ஆளுநரால், செல்வாக்குகளுக்கு அப்பாற்பட்டு உறுதிப்படுத்த முடிகின்றதா என்பதை கூர்ந்து கவனிப்போம்.

# ஜேவிபியின் கர்மா!

**உபுல் யோசப் பெர்னாண்டோ**

இலங்கைக்கு கைத்தொலைபேசிகளை அறிமுகப்படுத்தியவர் ரணசிங்க பிரேமதாச. அந்த நாட்களில், இலங்கையின் முதல் மொபைல் போன் செங்கல் என்று அழைக்கப்பட்டது. மேலும், பிரேமதாசவின் காலத்தில்தான் இலங்கை முதல் முறையாக இணையத்துடன் இணைக்கப்பட்டது. அதற்கான பணியை அப்போதைய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் ரணிலிடம் ஒப்படைத்திருந்தார் பிரேமதாச.



தான் இலங்கைக்கு அறிமுகப்படுத்தும் கைத்தொலைபேசியும் இணையமும் தனது மகனின் அரசியல் தன்மையைக் கொன்றுவிடும் என்று பிரேமதாச கனவிலும் நினைக்கவில்லை.

சமூக ஊடகங்களில் சஜித்தைவிட இலங்கையில் வேறு எந்த அரசியல்வாதியும் கேவலப்படுத்தப்படவில்லை. மேலும் இலங்கையில் பிரேமதாசாவைவிட எந்த ஒரு தலைவரும் பத்திரிகைகளில் அவதூறு செய்யப்படவில்லை. இலங் கைக்கு தொலைக்காட்சியை முதலில் அறிமுகப்படுத்தியவர் ரணிலின் மூத்த சகோதரர் ஷான் விக்கிரமசிங்க. அதுதான் ஐடிஎன். ஆனால் ரணிலைவிட எந்தத் தலைவரையும் தொலைக்காட்சியில் கேவலப்படுத்தியதில்லை. அவரது மூத்த சகோதரர் இலங்கைக்கு அறிமுகப்படுத்திய ஐரிஎன் மற்றும் அவரது மாமா ஜே.ஆர் ஜப்பானில் இருந்து பரிசாகப் பெற்ற ரூபவாஹினி தொலைக்காட்சி ஆகியவற்றால் இழிவுபடுத்தப்பட்ட ஒருவரின் அரசியல் தன்மை கொல்லப்பட்டது.

இலங்கையில் சமூக ஊடக அரசியல் 2015இல் ஆரம்பிக்கப்பட்டாலும் 2019இல்தான் சமூக ஊடகங்கள் ஊடாக அரசியல் அலை உருவானது. அந்த அலை சஜித்தை எதிரியாக்கியது. காரணம், 2019 ஜனாதிபதித் தேர்தலில் சஜித் ஐ.தே.கவை எதிர்த்துப் போட்டியிட்டமைதான்.

1994ஆம் ஆண்டு சந்திரிகா ஜனாதிபதியான பின்னர், நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் ரணிலால் நாட்டைக்கட்டியெழுப்ப முடியும் என்ற கருத்து பரவியபோது, ரணிலை மிஸ்டர் பீன் போல் அலங்கரித்து நகைச்சுவையாகக் காட்டி அதனை சந்திரிகாவின் கோயபல்ஸாக இருந்தவரான மங்கள பரப்புரை செய்தார். ரணிலின் இயலாமையைக் காட்ட ரணிலால் நாட்டைக்கட்டியெழுப்ப முடியாது என்றும் மக்களை நம்ப வைத்தார். அப்போது ரணில் சொல்லும் கதைகளைத் திரித்து, இலங்கையின் வரலாறுகூடத் தெரியாத களிமண் ஆலை ரணில் என்று மங்கள காட்டினார். மங்களா அதைத் தொலைக்காட்சியில் செய்தார்.

2001க்குப் பிறகு ரணிலை முட்டாளாக்கி மங்கள செய்ததையே கடந்த தேர்தல்களில் ஜே.வி.பி, ரணிலை ஜோக்கராக உருவாக்கிச் செய்தது. கோட்டாபயவின் சமூக வலைதளமே சஜித்தை 'முட்டாள் மகன்' என்று அழைக்க ஆரம்பித்தது. 2019 ஜனாதிபதி தேர்தலின்போது சஜித்தின் பேச்சுக்களை திரித்து சஜித்தை ஜோக்கராக்கிவிட்டனர். 2019இல் சஜித் தோற்றுப் போனது அந்த சமூக ஊடகங்களின் சேறு பூசலினால்தான்.

ஈஸ்டர் குண்டுவெடிப்பு மற்றும் பத்திரப்பதிவு ஊழல் தொடர்பாக மைத்திரி மற்றும் ரணிலை அவதூறாக பேசியவர் சஜித் என்று பொய்யாகத் தகவல் பரப்பினார்கள். எனினும், சஜித்தின் கல்வித் தகுதியை கொச்சைப்படுத்த ஆரம்பித்தது ரணிலின் ஆதரவாளர்களே.

2010ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னர்,ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப் பதவி சஜித்துக்கு வழங்கப்படவேண்டும் என்று கட்சிக்குள் பெரும் அலை வீசியபோது, ரணில் ஆங்கில இணையத் தளத்தைக் கைப்பற்றி, சஜித்தின் பட்டச் சான்றிதழைப் பொய்யாக்கி பெரும் அவதூறு பரப்புரை செய்தார். ரணிலால் ஏமாற்றப்பட்ட இந்த இணையத்தளம், சஜித் பட்டம் பெற்ற லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் சஜித்தின் பட்டம் குறித்து கேட்டபோது, அந்த பல்கலைக்கழகம் அளித்த எழுத்துப்பூர்வ பதில் இது.

"சஜித் பிரேமதாச லண்டன் பொருளாதாரப் பள்ளியில் சர்வதேச உறவுகள் பட்டம் பெற்றுள்ளதாக எமது தகவல்கள் தெரிவிக்கின்றன" 2013.10.03

அந்தப் பதில் கிடைத்த பின்னரும் ரணிலும் அவரது ஆதரவாளர்களும் சஜித்தை அவதூறு செய்வதைக் கைவிடவில்லை. படிக்காத முட்டாள் என்று சஜித் மீது தொடர்ந்து அவதூறு செய்தனர். இந்தச் சேற்றை 2019 ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டாவின் சமூக ஊடகங்களைக் கையாளுபவர்கள்



பயன்படுத்தியுள்ளனர். சஜித்தின் பட்டம் போலியானது என்று கூறி சஜித்தின் மீது முழு பலத்துடன் சாட ஆரம்பித்தனர். அநுர சஜித்தைவிடப் படித்தவர் என்று காட்ட ஜேவிபி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் சமூக வலைத்தள பயனாளர்களும் கோட்டாவின் அணியில் குதித்தனர்.

2019 ஜனாதிபதித் தேர்தலில் சஜித் தோல்வியடைந்து எதிர்க்கட்சித் தலைவரானபோது, சஜித்தின் தலையை ஆராயவேண்டும் என்று அநுர பகிரங்கமாகக் கூறினார். கோத்தாவை ஜனாதிபதியாக்கிய சமூக ஊடகங்கள் 'கோட்டா ஃபெயில்'

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# சட்டவிரோதமாக பனை மரங்கள் தனங்கிளப்பு பகுதியில் தறிப்பு

தனக்கிளப்பு பகுதியில் 25 இற்கும் மேற்பட்ட அனுமதியற்ற சட்டவிரோத பனை மரங்கள் தொடர்ச்சியாக தறிக்கப்பட்டு வந்த நிலையில் பொதுமக்கள் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து பனை அபிவிருத்தி சபையால் சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது .

குறித்த சம்பவம் தொடர்பில் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சகாதேவன் தெரிவிக்கையில் -

தனங்கிளப்புப்பகுதியில்தொடர்ச்சியாகசட்டவிரோத பனை மரங்கள் வெட்டப்படுவதாக பனை அபிவிருத்திச் சபைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

முறைப்பாட்டின் அடிப்படையில் எமது உத்தியோத்தர்கள் குறித்த இடத்திற்கு விஜமம் மேற்கொண்ட நிலையில் அங்கு 25 இற்கும் மேற்பட்ட பனை மரங்கள் தறிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் கனகர இயந்திரங்கள் குறித்த பகுதியில் கொண்டுவரப்பட்டமையும் நேரடியாக அவதானிக்கப்பட்டது.

குறிப்பாக சொல்ல வேண்டுமானால் இள வயது பனைகள் பல தறிக்கப்பட்டும் அடிப்பாகங்கள் எயியூட்டப்பட்ட நிலையிலும் காணப்பட்டது.

சம்பவம் தொடர்பில் நெல்லியடியைச் சேர்ந்த காணி உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் வரவழைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்வதாக உறுதியளித்தனர்.

பனை மரங்களை வெட்டுவதற்காக எடுத்துவரப்பட்ட கனகர இயந்திரங்களை முறைப்பாட்டில் பதிவு செய்யுமாறு எமது உத்தியோகத்தர்கள் வலியுறுத்திய நிலையில் சாவகச்சேரி பொலிஸார் ஏற்க மறுத்துள்ளனர்.

இந்த சட்ட விரோத செயற்பாடுகளுடன் சாவகச்சேரி பொலிஸாருக்கு தொடர்பு இருப்பதாக சந்தேகம் எழுந்த நிலையில் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாகன இலக்கங்களை முறைப்பாட்டில் பதியாவிட்டால் மேலிடத்தில் முறைப்பாடு செய்ய வேண்டி வரும் எனக் கூறிய நிலையில் முறைப்பாட்டை ஏற்பதாக தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

சட்ட விரோத பனை மரங்கள் தறிக்கப்பட்டால் 0779273042 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை தர முடியும் என பனை அபிவிருத்திச் சபை தலைவர் மேலும் தெரிவித்தார்.

# ஜேவிபியின்......

4ம் பக்கத் தொடர்ச்சி..........

பரப்புரையுடன் இணைந்தபோது, அந்த சமூக ஊடகத்தின் ஹீரோவாக சஜித் ஆகிவிடுவாரோ என்று அநுரவும் ஜே.வி.பியும் பயந்தனர். அப்போதிருந்து, ஜே.வி.பி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன கோட்டாவின் சமூக ஊடக பரப்புரையைத் தாம் கைப்பற்றின, சஜித்தை ஒரு முட்டாள் போல் மக்களிடம் வெளிப்படுத்தத் தொடங்கின.

லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் பட்டம் பெற்ற இலங்கையின் மிகவும் சக்திவாய்ந்த அரசியல்வாதி என்.எம். பெரேரா. அவருக்குப் பிறகு, லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் பட்டம் பெற்ற சக்தி வாய்ந்த அரசியல்வாதி சஜித் பிரேமதாசவே. அத்துடன், அமெரிக்காவின் மேரிலாந்து பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்திற்காக நுழைந்து பரீட்சையில் சித்தியடைந்து, தந்தை பிரேமதாச படுகொலை செய்யப்பட்டபோது, தனது கலாநிதிப் பட்டத்தை நிறுத்திவிட்டு இலங்கைக்கு வந்தவர் அவர். பின்னர் எதிர்கட்சித் தலைவரானார், தான் தவறவிட்ட முனைவர் பட்டத்தைப் பெறுவதற்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காகப் பதிவு செய்தார். இன்னும் தொடர்கிறார்.

2019 ஜனாதிபதி தேர்தல் மற்றும் 2024 ஜனாதிபதி தேர்தலின்போது சமூக ஊடகங்களில் அதிகம் பகிரப்பட்டது சஜித்தின் சாதாரண தரச் சான்றிதழ் என்ற போலிச் சான்றிதழ். அது போலியான சான்றிதழ் என்பதை நிரூபித்து, லண்டனில் உள்ள மில் ஹில் கல்லூரியின் ஆக்ஸ்போர்டு -கேம்பிரிட்ஜ் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைச் சான்றிதழ்களை அவர் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இலங்கையில் பல சக்திவாய்ந்த தலைவர்கள் வெளிநாட்டு கல்லூரிகளில் சாதாரண அல்லது உயர்தரம் படித்துள்ளனர். பண்டாரநாயக்கா மற்றும் டட்லி சேனநாயக்கா ஆகியோர் பிரித்தானியப் பாடசாலைகளில் சாதாரண மற்றும் உயர்- தரம் பயின்றவர்கள். சஜித்தும் அதைத்தான் செய்தார்.

லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் பட்டம்



பெற்ற ஒருவர் இலங்கையின் பிரதமராகவோ அல்லது ஜனாதிபதியாகவோ ஆகவில்லை. இலங்கை பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையில் இருந்தவேளையில், இலங்கைக்கு இவ்வாறான பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற தலைவர் ஒருவர் தேவைப்பட்டார். எனினும் களனிப் பல்கலைக்கழகத்தில் வேதியியலில் பட்டம் பெற்ற ஒரு தலைவரை இலங்கை மக்கள் தெரிவு செய்தனர். சஜித்துக்கு சாதாரண தரம்கூட இல்லை என்று ஜேவிபி -மற்றும் தேசிய மக்கள் சக்தி உருவாக்கிய சமூக வலைதள அலையே இதற்குக் காரணம்.

சஜித் ஒரு பள்ளிக்குச் சென்று ஜப்பானிய மொழியில் பேசியதும், ஜப்பானிய நாட்டவருடன் பேசியதும் மிகப்பெரியளவில் அவதூறு செய்யப்பட்டன. சஜித்தின் ஜப்பானிய வார்த்தைகள் இலங்கையில் பிரபலமான நையாண்டி வீடியோவாக மாறியது. ஆனால் இறுதியில், ஜப்பானிய பட்டம் பெற்றதன் காரணமாக அநுரவின் ஆளும்தரப்பு சபாநாயகர் வீட்டிற்குச் செல்ல வேண்டியிருந்தது. 1997ஆம் ஆண்டிலிருந்து கலாநிதிப் பட்டங்களையும் பேராசிரியர் பதவிகளையும் பட்டங்களையும் விற்று வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் ஜே.வி.பிக்கு ஜப்பானியப் பட்டம் காரணமாக நாட்டில் அவமானம் ஏற்பட்டது. கர்மவினை தன் வேலையைக் காட்டாமல் விடாது.



காலைக்கதிர்
Kalaikkathir

# கல்வியிலே மாற்றம் ஏற்பட்டால் சமூகத்திலே மாற்றம் ஏற்படும்

## கோடீஸ்வரன் எம்.பி. இடித்துரைப்பு

கல்முனை விவேகானந்தா பாலர் பாடசாலையின் ஆண்டு கலை விழா சந்தான ஈஸ்வரர் மண்டபத்தில் பாடசாலையின் ஆசிரியர் திருமதி சரோஜினி சாந்தகுமாரன் தலைமையில் இடம்பெற்றது.

இங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் தொடர்ந்தும் தனதுரையின்போது தெரிவித்தவை வருமாறு -

உலகத்திலே பாரிய ஒரு மாற்றத்தை உண்டுபண்ணுகின்ற ஒன்றாக கல்விதான் காணப்படுகின்றது.

கல்வியினால்தான் சகலதையும் சாதித்துக் கொள்ள முடியும். ஒன்று இரண்டு அல்ல அதிகளவான காரியங்களை இந்த கல்வியினால்தான் சாதித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். ஏனென்றால், கல்வி என்பது மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதமாக இருக்கின்றது. அந்த கல்வியை பெற்றோர்கள் கொடுக்க வேண்டும். நீங்கள் பிள்ளைகளுக்கு சரியான முறையில் கல்வியை கொடுத்தால் நிச்சயமாக சமூகத்திலே பாரிய மாற்றம் ஏற்படும். அது மட்டுமல்ல, உங்களை அந்த பிள்ளைகள் தரப்படுத்தும் சிறந்த கல்வியை கொடுக்க வேண்டிய கடமை ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல இங்கே இருக்கின்ற பெற்றோர்களுக்கும் இருக்கின்றது.

அதேபோல் இந்த பிள்ளைகளை அண்டி வாழ்கின்ற சமூகத்துக்கும் சிறந்த கல்வியை கொடுக்கின்ற அந்தக் கடமை இருக்கின்றது.

ஆகவே ஒரு சிறந்த கல்விதான் உலகத்திலே சகலதையும் சாதிக்கக்கூடிய தன்மையும் பக்குவமும் கொண்ட கல்வி என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. இன்று இந்த நாடு பொருளாதார ரீதியாக பின்னடைந்திருக்கின்ற நிலை காணப்படுகின்றது.

இந்த நாட்டிலே இருக்கின்ற அரசாங்கமானது இதை தக்க வைத்துக் கொள்வதற்காக அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

விசேடமாக நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் மந்த நிலையிலே இருக்கின்றது. நாடு மிகவும் பாதாள நிலைக்கு தள்ளப்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது. அந்த வகையிலே இந்த சவால்களை நாங்கள் எதிர் எதிர்கொண்டு வெற்றி அடைய வேண்டுமென்றால், கல்வி என்பது மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது.

கல்வியிலே நாம் மாற்றங்களை கொண்டு வர வேண்டும்.

இங்கே இருக்கின்ற சிறார்கள் தங்களது செயற்பாடுகளை திறமையாக திறம்பட செய்திருக்கிறார்கள். அவர்களுக்காக நல்ல பழக்கத்தை, பண்புகளை நாங்கள் ஊட்ட வேண்டும். அப்படி நாங்கள் நல்ல பழக்கங்களை பண்புகளை ஊட்டுகின்ற பொழுதுதான் இந்நாட்டிலே நாங்கள் சிறந்த முறையிலே கல்வியை பெறக்கூடிய அந்த சூழ்நிலை காணப்படும்.

எனவே, இந்த பிரதேசங்களில் கூடுதலாக போதைவஸ்து அதே போல் வேற முறையற்ற செயற்பாடுகள் அதாவது சட்டத்துக்கு முரணாக செயற்படுகின்ற செயற்பாடுகள் இந்த பகுதியிலே மிகக் கூடுதலாக வலுப்பெற்று இருக்கின்றது. இதை நாம் தடுத்து நிறுத்த வேண்டும். எங்களது எதிர்கால பிள்ளைகள் நன்றாக சிறப்பாக வளர வேண்டுமென்றால் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள், அதேபோல் போதைப் பொருள் களை விற்கின்றவர்களை நாங்கள் அடையாளம்கண்டு உரிய அதிகாரிகளுக்கு உரிய நேரத்திலே அறிவிக்க வேண்டிய கடமை இங்கே இருக்கின்ற ஒவ்வொரு பெற்றோருக்கும் இருக்கின்றது.

நாங்கள் எங்களது பிள்ளைகளை எதிர்கால சந்ததியினரை பாதுகாக்க வேண்டிய கடமை எங்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றது. ஆகவே, நாங்கள் விழிப்பாக இருக்க வேண்டும். நாங்கள் விழிப்பாக இருக்கின்ற பொழுதுதான் எங்களது பிள்ளைகளின் எதிர்காலத்தை நாங்கள் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதை இந்த இடத்தில் கூற விரும்புகின்றேன்.

தமிழர்கள் நாங்கள் ஒரு தனித்துவமான இனம். எங்களது இனத்தின் தனித்துவத்தை பாதுகாக்கின்ற கடமை எங்களிடம் இருக்கின்றது. நாங்கள் பாரம்பரியமாக வளர்த்தெடுக்கப்பட்ட ஓர் இனம்.



தமிழ் என்பது உலகத்தின் முதன்மையான மொழி. மூத்த மொழி, புராதன மொழி, செம்மொழி இப்படியான மொழியை பேசுகின்ற நாங்கள் தனித்துவமான மக்களாக செயற்பட வேண்டும். அது அரசியலாக இருக்கட்டும் அல்லது பொருளாதார ரீதியான விடயங்களாக இருக்கட்டும் அல்லது கல்வி ரீதியான விடயங்களாக இருந்தாலும், நாங்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து தனித்துவமாக எங்களுக்குள்ளான தனித்துவத்தை பாதுகாக்க வேண்டும். நாங்கள் தமிழர்களின் தனித்துவத்தை மொழியின் அடையாளத்தை எப்போது பாதுகாக்கின்றோமோ அப்பொழுதுதான் எமது இனம் ஏனைய இனத்தவர்களால் பாதிக்கப்படாத ஒரு நிலைத்து நிற்கக்கூடிய இனமாக இருக்கும் என்பதை இவ்விடத்தில் தெளிவாக கூற விரும்புகின்றேன்.

அதேபோல் எங்களது எதிர்கால சந்ததிகள் இந்த பிள்ளைகளுக்கும் எங்கள் கலாசாரத்தை, தமிழை எங்களது பண்பாடுகளை, எங்களது அடையாளத்தை நிலை நிறுத்தக்கூடிய அனைத்து வழிகளையும் நீங்கள் செய்ய வேண்டும்.

இந்நிகழ்விலே கலந்து கொண்டிருக்கின்ற இந்த நிகழ்வை ஒழுங்கு செய்த முன்பள்ளி ஆசிரியர்களே, அதேபோல் இந்நிகழ்விலே கலந்து கொண்டிருக்கின்ற எனது அன்பு சிறார்களே மற்றும் இங்கு வருகை தந்திருக்கின்ற எங்களது மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சிவலிங்கம் அண்ணன் அவர்களே, அதேபோல் எங்களது கண்ணகி அம்மன் ஆலயத்தின் தலைவர் அவர்களே அதேபோல் தம்பி துரைராஜ் அவர்களே, மற்றும் இங்கு வருகை தந்திருக்கின்ற பெற்றோர்களே உங்கள் அனைவருக்கும் மாலை வணக்கத்தை தெரிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

விசேடமாக இந்த முன்பள்ளி ஆசிரியர்கள் இங்கே இருக்கின்ற பிள்ளைகளுக்கு சரியான முறையில் அந்த கற்பித்தலை சரியாக செய்திருக்கின்றார்கள். அவர்களுக்காக எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நிகழ்வுகளை சிறப்பாகச் செய்த அன்பு சிறார்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறார்கள் மிக அழகாக தனது செயற்பாடுகளை வெளிப்படுத்தி இருந்தார்கள். அவர்களை பார்க்கின்ற பொழுது உண்மையாக எங்களது மனதிலே ஓர் ஆத்ம திருப்தி வருகிறது.

இந்த பிள்ளைகளை பார்க்கின்ற பொழுது அவர்கள் நிச்சயமாக எதிர்காலத்திலே பெரிய இடத்திலே நல்ல நிலைமையிலே வகிக்கின்ற திறமை காணப்படுகிறது.

இந்த நாட்டை வளப்படுத்தக் கூடியவர்களாக ஒவ்வொருவரும் நல்ல துறையிலே அவர்கள் வளர வேண்டும் என்று வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றும் கூறினார்.

# முதலை தாக்கிய முதியவர் வவுனியாவில் பரிதாப சாவு



வவுனியாவில் முதலை தாக்கியதில் சூடுவெந்தபுலவை சேர்ந்த பெண் ஒருவர் பலியாகியுள்ளார் என உலுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது -

ஞாயிற்றுக்கிழமை மாடுகளை மேய்ப்பதற்காக பாவற்குளம் - சூடுவெந்தபுலவு பகுதிக்கு சென்ற வேளை அப்பகுதியில் காணப்பட்ட ஆற்றுப்பகுதியில் இறங்கிய போதே முதலையின் தாக்குதலுக்கு இலக்காகி பலியாகியுள்ளார்.

இச்சம்பவத்தில் சூடுவெந்தபுலவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான 67 வயதுடைய ஆதம்பாவா முசிறியா என்பவரே பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உலுக்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 100

# தொலைபேசியில் கொலைமிரட்டல் விடுத்து கப்பம் கோரிய இரு சந்தேகநபர்கள் கைது

களனி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திப்பிட்டிகொட பகுதியில் வெளிநாட்டில் தலைமறைவாகியிருக்கும் போதைப்பொருள் வியாபாரி ஒருவரால் தொலைபேசியில் கொலைமிரட்டல் விடுத்து கடந்த 04ஆம் திகதி பெண்ணொருவரிடம் கப்பம் கோரிய குற்றத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெண்ணொருவரிடம் 10 லட்சம் ரூபா கப்பம் கோரிய குற்றம் தொடர்பாக மேல்மாகாண வடக்கு குற்றப்புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அதன்படி, கிரிபத்கொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலுகம பகுதியிலும் பேலியகொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பட்டிய சந்தி பகுதியிலும் ஞாயிற்றுக்கிழமை சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 35 மற்றும் 53 வயதுடைய களனி பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

மேலும், குறித்த சம்பவம் தொடர்பில் மேல்மாகாண வடக்கு குற்றப்புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புலம்பெயர்வு சட்டக் கொள்கை பற்றிய சான்றிதழ் கற்கைநெறி

## திறந்த பல்கலைக்கழகத்துடன் கூட்டிணையும் யு.எஸ். எயிட்

இலங்கையில் 69 தொழில் வல்லுநர்கள் புலம்பெயர்வு சட்டம் மற்றும் கொள்கை பற்றிய முதலாவது சான்றிதழ் கற்கைநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளமையை அறிவிப்பதில் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பு (யுஎஸ்எயிட்) ஊடாக அமெரிக்கா பெருமை கொள்கிறது. ஆட்கடத்தலுக்கு எதிரக போராடுவதற்கென தமது சமூகங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு கருவிகளையும் அறிவுகளையும் இந்த தொழில் வல்லுநர்கள் தற்போது கொண்டுள்ளனர்.

இந்த ஆறு மாதகால கற்கைநெறியானது, யுஎஸ்எயிட்இன் 'ஆட்கடத்தலுக்கு எதிராக போராடுவதற்கு சிவில் சமூகத்தை வலுவூட்டல்' திட்டம் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கு இடையிலான கூட்டு முயற்சியொன்றாகும். திட்டத்தை நடைமுறைப் படுத்துகிறது. புலம்பெயர்வு மற்றும் சட்டம் பற்றிய இந்த கற்கைநெறியானது, கட்டமைக்கப்பட்ட கல்விசார் கற்கைநெறியொன்றை வழங்குவதன்நிமித்தமானசிவில் சமூக அமைப்பொன்றுக்கும் இலங்கையிலுள்ள முன்னணி பல்கலைக்கழமொன்றுக்கும் இடையிலான முதலாவது கூட்டாண்மையை குறிக்கிறது.

அரச அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், இளைஞர்கள், தன்னார்வ தொண்டர்கள், மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் உள்ளடங்கலான இந்த மாணவர்கள் ஒன்லைன் கற்கைநெறி மூலம் புலம்பெயர்வு சட்டங்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பில் தேசிய மட்டத்தில் கற்றனர். இவர்களில் 50 மாணவர்கள் சிங்கள மொழி மூலம் கற்கைநெறியை பயின்றதுடன், ஏனையவர்கள் தமிழ் மொழி மூலம் கற்றனர். இந்த மாணவர்கள் அனைவரும் நாவலையிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சட்ட கற்கைகள் திணைக்களத்தில் டிசெம்பர் 20 ஆம் திகதி நடைபெற்றவைபவமொன்றில் அவர்களுக்கானசான்றிதழ்களை பெற்றுக்கொண்டனர்.

'ஆட்கடத்தல் என்பது ஓர் உலகளவிய பிரச்சினை என்கின்ற போதிலும், அதற்கு எதிரான போராட்டமானது உள்ளூரிலேயே, அதுவும் ஒவ்வொரு சமூகத்திலுமே ஆரம்பிக்கிறது,' என்று யுஎஸ்எயிட்இன் இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான பணிப்பாளர் கேப்ரியல்க்ராவ் தெரிவித்தார். 'புலம்பெயர்வு சட்டம் மற்றும் கொள்கை தொடர்பில் இலங்கை



நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் தொழில் வல்லுநர்களுடன் பங்காண்மையை ஏற்படுத்திக் கொள்வதில் அமெரிக்கா பெருமை கொள்கிறது. இதன் ஊடாக அவர்கள் அவர்களதுசமூகங்களில்பாதுகாப்பான புலம்பெயர்வை ஊக்குவிப் பதற்கும்மற்றும்ஆட்கடத்தலை தடுப்பதற்கும் பணியாற்ற முடியும், என்றும் அவர் குறிப்பிட்டார்.

புலம்பெயர்வு மற்றும் சர்வதேச புலம்பெயர்வு சூழலில் அரசின் பொறுப்பு, ஆட்கடத்தல் மற்றும் கடத்தல் வியாபாரங்களுக்கு தீர்வு காண்பதற்கான சர்வதேச சட்ட கட்டமைப்பு, முறைகேடான புலம்பெயர்வு செயற்பாடுகளின் தடுப்பு மற்றும் பாதிக்கப்பட்டோர், திரும்பிவருவோர் மற்றும் மீள் ஒருங்கிணைப்புக்கான உரிமைகள் உள்ளிட்ட தலைப்புகள் இந்த கற்கைநெறியில் உள்வாங்கப்பட்டன. ஆட்கடத்தலுக்கு எதிரான போராட்டத்தை அவர்களது சமூகங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு மேலதிகமாக, சான்றிதழலிப்பானது இந்தபட்டதாரிகள் அரசாங்க அதிகாரிகளுடனும், தனியார் துறை அதிகாரிகளுடனும் மற்றும் பிரதேச,மாவட்ட மற்றும்தேசிய மட்டங்களில்சமூகங்களுடனும் செயலாற்றுவதைஇயலுமாக்கி அவர்களது நம்பிக்கையை அதிகரிக்கும்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான ஆட்கடத்தல் பற்றிய அறிக்கையானது, இலங்கையை அதனது அடுக்கு 2 நிலையில் வைத்து ஆட்கடத்தலுக்கு எதிரான போராட்டத்தில் இலங்கையின் முன்னேற்றத்தை அங்கீகரித்துள்ளது.

ஆனாலும், ஏனைய நடவடிக்கைகளுக்கு மத்தியில் ஆட்கடத்தல் தொடர்பான குற்றங்களை விசாரிப்பதிலும் குற்ற விசாரணைக்கு உட்படுத்துவதிலும் மற்றும் புலம்பெயர் பணியாளர்கள் மத்தியில் ஆட்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதிலும் முயற்சிகளை வலுப்படுத்துமாறும் இலங்கை அரசாங்கத்தை இந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது.



காலைக்கதிர்
Kalāikkathir

## முன்னாள்....

### (இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களின் சலுகைகளை மறுபரிசீலனை செய்வதற்கு நீதியரசர் (ஓய்வுநிலை) கே.டி .சித்திரசிறி தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டது. இந்த குழு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அண்மையில் அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

நீதியரசர் (ஓய்வுநிலை) சித்திரசிறி குழு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட தீர்மானங்களை பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால டிசெம்பர் 17 நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார். முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கான இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 1448 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளதாக அப்போது அவர் குறிப்பிட்டார்.

”முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு அதிகளவில் நிதி செலவழிக்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் இந்த மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்கு மட்டும் இராணுவம் 328 மில்லியன் ரூபாய், பொலிஸ் 327 மில்லியன் ரூபாய், ஜனாதிபதி செயலகம் 55 மில்லியன் ரூபாய், என்ற அடிப்படையில் 710 மில்லியன் ரூபாய் செலவழித்துள்ளன'' என்றார் அமைச்சர்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த முப்படையைச் சேர்ந்தவர்கள் மீளப்பெறப்பட்டு நேற்று (திங்கட்கிழமை) முதல் பொலிஸ் பாதுகாப்பு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்கு 60 பொலிஸாரும் 1 பொலிஸ் வாகனமும். ஜனாதிபதி செயலகத்தின் 3 வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

## தேர்தலின் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதுவும் 2014 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்ளுக்கு அதாவது 2020/2021 பட்டமளிப்பு பெற்ற பட்டதாரிகளுக்கு பட்டம் வழங்கவில்லை. யாழ். பல்கலைக்கழகம் மாணவர்களை வேலைவாய்ப்பில் உள்ளீர்க்க வேண்டிய தேவை குறித்து தெளிவுபடுத்திக் கடிதம் ஒன்றினை வழங்கியிருந்தது. கொரோனா, குண்டுவெடிப்பு, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்க போராட்டம் என்பன எமக்குப் பட்டத்தினை பெறுவதில் தாமதம் ஏற்படக் காரணமாக அமைந்தன. இருந்த பொழுதிலும் எமது அணியினை சேர்ந்த வேறு பல்கலைக்கழக மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்நிலையில் கடந்த ஆளும்தரப்புடன் நாம் பல்கலைக்கழகம் எமக்கு பட்டம் தருவதில் ஏற்பட்ட தாமதம் குறித்த நியாயபூர்வமான காரணத்தை முன்வைத்து கலந்துரையாடியிருந்தோம். ஆனால் ஆளும்தரப்பு மாறிவிட்டது. ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவிற்கு கடந்த ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி விரைவு தபாலில் எமது கோரிக்கையை அனுப்பினோம், நவம்பர் மாதம் 4 ஆம் திகதி பிரதமர் ஹரிணிக்கு விரைவு தபாலில் எமது கோரிக்கையை அனுப்பி இருந்தோம். எமக்கு எந்த பதிலும் வழங்கபடவில்லை.

ஆளும்தரப்புக்குச் சார்பானவர்கள் ஜனாதிபதி தேர்தல் முடிய பேசலாம் நாடாளுமன்ற தேர்தல் முடிய பேசலாம் என தெரிவித்தனர். இரு தேர்தல்கள் முடிந்த பின்னரும் எந்தப் பயனும் இல்லை. தேசிய கல்வியியற்கல்லூரிக்குத் தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் எம்மை விட குறைந்தளவான புள்ளிகளுடன் அரசசேவைக்கு உள்ளீர்க்கப்பட்டு பின்னர் நியமனத்துடன் வெளியேறுகின்றார்கள்.

நாம் படித்து முடிக்க முதல் அடுத்த பட்டத்தினையும் தொடர்கின்றார்கள். கூடுலான புள்ளிகளை பெற்ற நாம் பெயின்டிங், கூலி, சந்தை வியாபாரிகளாக உள்ளோம்.

தற்பொழுது போட்டிப் பரீட்சை குறித்துப் பேசுகின்றனர். நல்ல விடயம் எமக்கு ஆட்சேபனை இல்லை. எனினும் அதற்கு முன்னர் உள்ளவர்களுக்கு பரீட்சை நடத்தப்பட்டதா என்பதை ஆராயவேண்டும். மேலும் தொல்லியல், சமூகவியல், தத்துவவியல் ஆகிய பாடங்களுக்கு வர்த்தமானியில் போட்டி பரீட்சைக்கு கோரப்படுவதில்லை. அவர்கள் பட்டதாரிகள் இல்லையா? போட்டிப் பரீட்சைகள் பாரபட்சமின்றி நடத்தப்பட்டால் எமக்கு ஆட்சேபனையில்லை.

வடக்கிலே சிங்கள மொழி, இரண்டாம் மொழிகற்கைநெறிக்கான ஆசிரியர் வெற்றிடம் உள்ளது. திணைக்களங்களில் மாகாண சபையின் கீழே மொழிபெயர்பாளர்களுக்கு வெற்றிடம் உள்ளது. வெளியே தகுதி வாய்ந்த பலர் உள்ளனர். தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் மொழிபெயர்பாளர் வெற்றிடம் உள்ளது.

ஆளும்தரப்பு 35,000 பட்டதாரிகளை உள்ளீர்க்கும் என்று கூறிய பொழுதிலும் இதுவரை நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. ஆகவே, ஏப்ரல் மாதம் உள்ளூராட்சி தேர்தல் முன்னெடுக்கப்படவுள்ளது. தேர்தல் காலத்தில் நியமனங்களை வழங்க முடியாது. தேர்தலுக்கு முன்னர் 2020/2021 வெளியேறிய உள்வாரி பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளித்து வேலை வாய்ப்பு வழங்கப்படவேண்டும். வெளிவாரி பட்டதாரிகள் தாம் பிறிதொரு வேலைவாய்ப்புடன் இதனை தொடர்பவர்களாவும் இருக்ககூடும். தொடர்ந்து 2022/2023 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

தொடர்ந்து எம்முடன் எந்தவித பேச்சுக்களையும் அரசு மேற்கொள்ளாதிருந்தால் வடக்கு கிழக்கில் மட்டுமல்லாது இலங்கை முழுவதும் பட்டதாரிகள் இணைந்து பெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும் – என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

### வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின்

## மாணவ முதல்வர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி

இரட்ணம் பவுண்டேஷன் நிறுவனத்தின் நிதி அனுசரணையில், விசன்ஸ் குடாபல் எம்பவர்மமன்ட் நிறுவனத்தினால்வலிகாமம்வலயத்திற்கு உட்பட்ட ஐந்து பாடசாலைகளின் மாணவ முதல்வர்களுக்கான ஐந்து நாள் கள் தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை சிறப்பாக நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில், கடந்த மார்கழி மாதம் 9 முதல் 13 ஆம் திகதி வலர நடத்தப்பட்ட இந்த தலலமைத்துவப் பயிற்சிப்பட்டறையில் யாஃவட்டு இந்துக்

கல்லூரி, யாஃவட்டு மத்திய கல்லூரி, யாஃசுழிபுரம் விக்டோரியா கல்லூரி, யாஃபண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் மற்றும் யாஃஅராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச்சார்ந்த 36 மாணவர்த் தலைவர்கள் தலைலமத்துவம் சார்ந்த பங்கு பற்றலை முதல்

செயற்பாடுகள் வழியில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

மாணவர்கல சுய விழிப்புணர்வு, தன்னம்பிக்கைலயக் கட்டியெழுப்பல், தலைமைத்துவம், குழுச்

செயற்பாடு, தொடர்பாடல், திட்டமிடல், எல்ஈரி முகாமைத்துவம் மற்றும் முன்வைப்பு திறன் சார்ந்த

திறன் விருத்திக்கும், தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வாழ்க்லக தொடர்பான ஊக்குவிப்பிற்க்கும்

இந்தப் பயிற்சி ஒரு வாய்ப்பாக அலமந்தது எனலாம்.

இந்த பயிற்சிப் பட்டலையில், பாடசாலல மாணவ முதல்வர்கள் சிறை;த முறையில் தங்களது தலைமைத்துவம் சார்ந்த துலங்கல்கலை மையப்படுத்தியிருந்தார்கள். ஒவ்மவாரு மாணவரும் தமக்கான சுயவிருத்தி திட்டம் ஒன்லை வடிவமைத்தமை இப்பயிற்சி முறையின் சிறப்பை மேம்படுத்தியது.

தங்களது தலலலமத்துவத் திணைப் மேம்படுத்துவதற்காக, பயிற்று விக்கப்பட்ட மாணவ முதல்வர்கள், பாடசாலல சார்ந்த சமூகப் பிரச்சிணைகளைத்தீர்ப்பலத நோக்கமாகக் கொண்டு, ஐந்து பாடசாலலசார்ந்த சமூக செயல் திட்டங்களை உருவாக்கியுள் னர். தத்தம் அதிபர்களின்

வழிகாட்டலில் சமூக செயல் திட்டங்களை நலடமுறைப்படுத்தி, தங்க ளது தலலமைத்துவத்தை இனிவரும் நாள்களில் மேம்படுத்த உள் னர். இவ்வாறு, சிறை;த தலலவர்களாக எதிர்காலத்தில் அவர்கள் உருவாக்கும் மாற்றங்கள், மிகச்சிறந்த விளைவுகளை சமூகத்தில் ஏற்படுத்துவதாகஇருக்கும்.

வலிகாமம் வலயத்தின் ஆலோசனை மற்றும் ஒருங்கிலணப்புடன், கலாநிதி இரட்ணம் நித்தியானந்தனின் வழிகாட்டலில் நடத்தப்பட்ட இந்த பயிற்சி பட்டறையில், விசன்ஸ் நிறுவனத்தின் தலலவர் வந்திரராஜா, பிரதம நிறைவேற்று அதிகாரி அ.மயூரன் ஆகியோர் பிரதம வளவார்களாகவும், விசன்ஸ் நிறுவனத்தின் நான்கு பயிற்சியாளர்கள் வவாளர்களாகவும் செயற்பட்டு பயிற்சியிலன முன்மனடுத்திருந்தனர்.

# பாடசாலை விடுமுறை மற்றும் பண்டிகை காலங்களில் வெளியிடங்களில் உண்பதால் பல நோய்கள் ஏற்படும்

## வைத்திய நிபுணர் தீபால் பெரேரா எச்சரிக்கை




பாடசாலை விடுமுறை மற்றும் பண்டிகை காலத்தை முன்னிட்டு வெளியிடங்களுக்கு சுற்றுலாவுக்காக செல்லும் சிறுவர்கள் சுகாதார மற்ற உணவகங்களில் உணவு மற்றும் சிற்றுண்டிகளை கொள்வனவு செய்து உண்பதால் வயிற்றுப்போக்கு, மற்றும் டைபைடு காய்ச்சல் ஏற்பட கூடுமென கொழும்புசிறுவர்வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலங்களில் ஏற்படக்கூடிய நோய் நிலைகளில் இருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பில் அவர் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

தற்போது பாடசாலை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதுடன் பண்டிகை காலத்தை முன்னிட்டு சிறுவர்கள் வெளியிடங்களுக்கு சுற்றுலாவுக்காக செல்வதும் அதிகரித்துள்ளது. அவ்வாறு சுற்றுலாக்களுக்கு செல்வோர் கண்களில் தென்படும் உணவகங்களிலும் கடைகளிலும் உணவு மற்றும் சிற்றுண்டிகளை கொள்வனவு செய்து உண்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு வெளியிடங்களில் உணவு பொருள்கள் மற்றும் பானங்களை கொள்வனவு செய்யும் போது அவதானத்துடன் செயற்பட வேண்டும். அசுத்தமான உணவுப் பொருள்களை உட்கொள்வதால் வயிற்றுப்போக்கு, டைபைடு காய்ச்சல் போன்ற நோய் நிலைமைகளுக்கு ஆளாக நேரிடலாம். ஆகையால் சிறுவர்களுக்கு ஈக்களிடமிருந்து பாதிக்கப்பட்ட சுகாதாரமான உணவு மற்றும் பானங்களை பெற்றோர் வழங்க வேண்டும்.

உணவகங்கள் மற்றும் உணவுப் பண்டங்களை தயாரித்து விற்பனை செய்பவர்களுக்கும் பொதுமக்களின் ஆரோக்கியத்தை கருத்திற் கொண்டு சுகாதாரமான உணவுப் பொருள்களை தயாரித்து விற்பனை செய்ய வேண்டும். சிறுவர்களுக்கு வயிற்றுப் போக்கு ஏதும் ஏற்படும் பட்சத்தில் எலுமிச்சை பழ பானம், அரிசி கஞ்சி, இளநீர், யோகட், வாழைப்பழம் ஆகியவற்றை வழங்குங்கள். எண்ணைசார்ந்த உணவுப் பொருள்களைத் தவிர்க்கலாம்.

இதன்போது உடலில் ஏற்படக்கூடிய நீரிழப்பை கட்டுப்படுத்துவது அவசியமாகும். தொடர்ச்சியாக வயிற்றுப்போக்கு காணப்படும் பட்சத்தில் தகுதி வாய்ந்த வைத்தியரை நாடுவது நல்லது.

அத்தோடு இந்நாள்களில் வாகன விபத்துக்களும் அதிகரித்துள்ளன. ஆகையால் வெளியிடங்களுக்கு பயணிக்கும் போது அவதானத்துடன் செயற்படுங்கள். ஆறு, கடல் உள்ளிட்ட நீர்நிலைகளில் நீராட, விளையாட விரும்புபவர்கள் பாதுகாப்பான இடங்களில் உரிய பாதுகாப்பு முறைகளை பின்பற்றி அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடலாம்.

இதன்போது பெற்றோர் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம். பண்டிகை கால கொண்டாட்டங்கள் மற்றும்புதுவருட கொண்டாட்டங்களில் ஈடுபடும். சிறுவர்கள் பாதுகாப்பான முறையில் மத்தாப்பு, பட்டாசுகளை வெடித்துமகிழலாம். எவ்வாறெனினும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் தீ காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொதுமக்கள் அவதானத்துடன் செற்படுவது நல்லது- என்றார்.

# கல்வித்துறையின் சவால்களை வெற்றிகொள்ள தொடர்ச்சியான ஒத்துழைப்பு வழங்கத் தயார்

## ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவிப்பு

தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கள் ஊடாக கல்வித்துறையில் தோற்றம் பெற்றுள்ள சவால்களை வெற்றிக் கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் பிரதமரிடம் உறுதியளித்துள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட தூதுக்குழுவின் பணிப்பாளர் டகாபுமி கடோனோவுக்கும், பிரதமர் கலாநிதி ஹரிணிஅமரசூரியவுக்கும்இடையிலான சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை கல்வி அமைச்சில் நடைபெற்றது.

இலங்கையின் அபிவிருத்தியில் பிரதான செயற்பாட்டு பங்குதாரராக ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்படுவது இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. இலங்கையின் தேசிய அபிவிருத்தியின் முதற் கட்டமாக புதிய கல்வி முறைமை மறுசீரமைப்பு குறித்து இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அதேபோல் புதிய கல்வி கொள்கையை வெற்றிகரமான முறையில் செயற்படுத்துவதற்காக பாடசாலைகளின் உட்கட்டமைப்பு மேம்பாடு, ஆசிரியர் - அதிபர் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இந்த கலந்துரையாடலின் போது எடுத்துரைத்துள்ளார்.

தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கள் ஊடாக கல்வித்துறையில் தோற்றம் பெற்றுள்ள சவால்களை வெற்றிக் கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் பிரதமரிடம் உறுதியளித்துள்ளனர்.

# மூதூர் மதுபானச் சாலையில் மோதல்: மூவர் காயம்; இருவர் விளக்கமறியலில்

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருதயபுரத்தில் அமைந்துள்ள மதுபானசாலையில் இரு குழுக்களுக்கு இடையே ஞாயிற்றுக் கிழமை மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த மோதலில் 45, 47, 37 வயதுடைய மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

இந்ததாக்குதலுடன்தொடர்புடைய 20, 25 வயதுகளையுடைய இருவரை மூதூர் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தின

இதன்போது அடுத்த 14 நாள்களுக்கு சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

அதேவேளை, தாக்குதலுடன் தொடர்புடைய மேலும் சிலர் தேடப்பட்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தாக்குதலில்காயமடைந்தமூன்று பேரும் மூதூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர், மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# மத்திய வங்கி ஆளுநர், திறைசேரி செயலராலேயே நாட்டில் நிதி நிர்வாகம் முன்னெடுக்கப்படுகிறது

## முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு

மத்திய வங்கி ஆளுனரும், திறைசேரி செயலாளரும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் பாதையிலேயே இவர்களை அழைத்துச் செல்கின்றனர். ஜனாதிபதி அநுர நடுவில் அமர்ந்திருப்பதும் இவர்கள் இருவரும் ஆட்சியைக் கொண்டு செல்வதும் மிகத் தெளிவாகத் தெரிவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பில் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஆட்சிக்கு வந்தவுடன் நாணய நிதிய ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாகக் கூறியவர்களுக்கு இன்று ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டில் ஓர் எழுத்தைக் கூட மாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. மத்திய வங்கி ஆளுனரும், திறைசேரி செயலாளருமே ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் பாதையிலேயே இவர்களை அழைத்துச் செல்கின்றனர். ஜனாதிபதி அநுர நடுவில் அமர்ந்திருப்பதும் இவர்கள ;இருவரும் ஆட்சியைக் கொண்டு செல்வதும் மிகத் தெளிவாகத் தெரிகிறது.

இந்தியாவின் அபிவிருத்தி திட்டங்களுக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட்ட இவர்கள், இந்திய விஜயத்தின் போது வெளியிடப்பட்ட கூட்டு அறிவிப்பில் சம்பூர் வேலைத்திட்டத்துக்கு முழுமையாக இணங்கியுள்ளனர். மக்கள் ஆணையைப் பெற்றமைக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளுக்கு முரணாகவே இவர்கள் தற்போது செயற்படுகின்றனர். 76 ஆண்டுகள் இலங்கை சாபத்தை அனுபவித்ததாக இவர்கள் கூறினால், சந்திரிகா அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகித்தவர்கள் அடிப்படையில் ஜே.வி.பி.யினதும் அதன் பங்குதாரர்களே.

ஜனாதிபதி கதிரையில் அமர்ந்த பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மறந்து போன வாக்குறுதிகளை நினைவுபடுத்துவதற்கான வேலைத்திட்டங்களையே தற்போது நாம் முன்னெடுத்திருக்கின்றோம்.



அதனை விடுத்து அரசாங்கத்தை கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றுவது எமது நோக்கமல்ல. 2010ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜனாதிபதி நிதியத்திடமிருந்து நிதியுதவி பெற்றவர்களின் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டால் அது மக்களுக்கு பாரிய ஆச்சரியத்தைக் கொடுக்கும். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நாமும் இதுகுறித்த தகவல்களைக் கோரியிருக்கின்றோம். - என்றார்.

# ஓமந்தைப் பொலிஸாரால் பெண் உட்பட ஐவர் கைது

வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸார் முன்னெடுத்த விசேட நடவடிக்கையில் ஒரு பெண் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நீதிமன்றத்தால் பிறப்பிக்கப் பட்ருந்த திறந்த பிடியாணையின் கீழ் ஒருவரையும், திகதியிடப்பட்ட பிடியாணையின் கீழ் நான்கு பேரும் என ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவத்தனர். 100






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.12.2024இல் வெளியிடப்பெற்றது